அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2024

# தமிழ்
## ஆண்டு 8

நேரம்: 150 மணித்துளிகள்

நாள்: 01.06.2024

**மொத்தப்புள்ளிகள்: 100**
(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

**பக்கங்கள்**
20

சுட்டெண்: | | | | | | | | | |

# பகுதி 1 - எழுதுதல்

## 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1. தமிழ்மறை என அழைக்கப்படும் நூல்
   1. நாலடியார்
   2. ஆத்திசூடி
   3. திருக்குறள்
   4. நல்வழி

2. இறந்தகால இடைநிலைகள்
   1. ப், வ்
   2. கின்று, கிறு
   3. த், ப், வ்
   4. த், ட், ற், இன், ன்

3. கலை நிகழ்ச்சிகளை மேடை ஏற்றுமுன் நடத்திப் பார்ப்பது
   1. ஒத்திகை
   2. அரங்கேற்றம்
   3. வெள்ளோட்டம்
   4. பட்டிமன்றம்

4. குறும்பா என்ற கவிதை வடிவத்தை தமிழ் இலக்கியத்திற்கு அறிமுகப்படுத்தியவர்
   1. சோமசுந்தரப்புலவர்
   2. மகாகவி து. உருத்திரமூர்த்தி
   3. கல்லடி வேலுப்பிள்ளை
   4. விபுலாநந்த அடிகள்

5. இளமையிற் கற்பது சாலச்சிறந்தது. இதில் சால என்பது
   1. இடைச்சொல்
   2. பெயர்ச்சொல்
   3. வினைச்சொல்
   4. உரிச்சொல்

6. நிலா விம்மி விம்மி அழுதாள். இதில் விம்மி விம்மி என்பது
   1. இரட்டைக்கிளவி
   2. அடுக்கிடுக்குத்தொடர்
   3. இணைமொழி
   4. அடுக்குத்தொடர்

7. முல்லை நிலத்தின் சிறப்பான இசைக்கருவி
   1. யாழ்
   2. புல்லாங்குழல்
   3. தண்ணுமை
   4. தாளம்

8. மலை ஒத்த தோள்களை உடையவன் இராவணன். இதில் வந்துள்ள உவமானம்
   1. தோள்
   2. ஒத்த
   3. வலிமை
   4. மலை

9. விந்தைச் சுவையுடைய கனிகள். இதில் விந்தை என்பது
   1. அச்சம்
   2. வியப்பு
   3. அன்பு
   4. தண்மை

10. யாழ்ப்பாணத்தின் இறுதித் தமிழ்மன்னன்
   1. எல்லாளன்
   2. பண்டாரவன்னியன்
   3. கயிலாயவன்னியன்
   4. சங்கிலியன்

11. வாணி தந்தையோடு நடந்து சென்றாள். இதில் வந்துள்ள வேற்றுமை
   1. இரண்டாம் வேற்றுமை
   2. ஏழாம் வேற்றுமை
   3. மூன்றாம் வேற்றுமை
   4. நான்காம் வேற்றுமை

12. 60ஆவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
   1. பொன்விழா
   2. வெள்ளிவிழா
   3. வைரவிழா
   4. பவளவிழா

13. ஈழம் கப்பல் கட்டும் தொழிலில் புகழ் பெற்றிருந்த ஆட்சிக்காலம்
   1. பாண்டியர்காலம்
   2. சோழர்காலம்
   3. பல்லவர்காலம்
   4. ஐரோப்பியர்காலம்

14. கந்தன் சுவருக்கு வெள்ளை அடித்தான். இதில் வெள்ளை அடித்தான் என்பது
   1. காலவாகுபெயர்
   2. சினையாகுபெயர்
   3. இடவாகுபெயர்
   4. குணவாகுபெயர்

15. தோள்கொடுத்தல் என்ற மரபுச்சொற்றொடர் குறிக்கும் பொருள்
   1. ஒழுங்குசெய்தல்
   2. உறுதுணையாக நிற்றல்
   3. போருக்கு அழைத்தல்
   4. மிக்க மகிழ்ச்சி அடைதல்

16. அறம் + நூல் என்பதன் புணர்ச்சி வடிவம்
   1. அறநூல்
   2. அறம்நூல்
   3. அறனூல்
   4. அறந்நூல்

17. பண்டாரவன்னியனின் வரலாற்றுச் சான்றுகளாக விளங்கும் ஊர்களுள் ஒன்று
   1. யாழ்ப்பாணம்
   2. மட்டக்களப்பு
   3. மன்னார்
   4. பனங்காமம்

18. நீங்கள் உண்ணுங்கள். இச்சொல்லியம்
   1. ஏவல் ஒருமை வினைமுற்று
   2. எதிர்மறை ஏவல் பன்மை வினைமுற்று
   3. எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று
   4. ஏவல் பன்மை வினைமுற்று

19. யாழ்ப்பாணத்தில் உருவாகிய தமிழரசின் தலைநகரம்
   1. நல்லூர்
   2. கற்சிலைமடு
   3. பூநகரி
   4. உடையாவுர்

20. எழிலன் சிறந்த எழுத்தாளன். இதில் எழுத்தாளன் என்பது
   1. தெரிநிலைவினை
   2. எச்சவினை
   3. ஏவல்வினை
   4. குறிப்புவினை

21. சிலப்பதிகாரத்தை எழுதியவர்
   1. சீத்தலைச் சாத்தனார்
   2. இளங்கோ அடிகள்
   3. ஔவையார்
   4. திருவள்ளுவர்

22. நண்பனுக்கு நண்பி போல தந்தைக்கு
   1. மகள்
   2. சிறுமி
   3. மாணவி
   4. தாய்

23. ஐரோப்பாவில் தமிழர் அதிகம் வாழும் நாடு
   1. பிரான்சு
   2. யேர்மனி
   3. சுவிற்சர்லாந்து
   4. ஐக்கிய இராச்சியம்

24. குளத்தில் மீன்கள் துள்ளி
   1. விளையாடுகிறது
   2. விளையாடுகின்றார்கள்
   3. விளையாடுகின்றன
   4. விளையாடுகின்றாள்

25. கயிலாயவன்னியன் வன்னியை ஆட்சி செய்தது
   1. 44 ஆண்டுகள்
   2. 40 ஆண்டுகள்
   3. 35 ஆண்டுகள்
   4. 34 ஆண்டுகள்

26. தமிழர் கடல் வணிகத்தில் சிறந்து விளங்கினர். இதில் வந்துள்ள அடைமொழி
   1. தமிழர்
   2. வணிகம்
   3. சிறந்து
   4. விளங்கினர்

27. கண்டான் என்பதன் வினையடி
   1. கண்ட
   2. கண்டு
   3. கண்
   4. காண்

28. அறநூல் காலத்தில் எழுந்த காப்பியம்
   1. திருக்குறள்
   2. மணிமேகலை
   3. நாலடியார்
   4. திரிகடுகம்

29. ஈழத்தில் சோழர் ஆட்சிக்காலத்தில் இரண்டாவது தலைநகரமாக விளங்கியது
   1. பொலநறுவை
   2. அநுராதபுரம்
   3. திருகோணமலை
   4. கண்டி

30. மணலாறு என்பதன் சொற்பிரிப்பு
   1. மணல் + ஆறு
   2. மண் + ஆறு
   3. மணல் + லாறு
   4. மண்ணு + ஆறு

30 X 1 = 30 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இசைக்கருவிகளின் வகைகளை எழுதுக.

2. அனுராதபுர நடுவண் அரசின் முன்னோடிகள் யாவர் ?

3. மகாகவி து. உருத்திரமூர்த்தி தனது கவிதை வாயிலாக எவற்றை எதிர்த்தார்?

4. தமிழீழ மண்மீட்புப் போரின் வரலாற்றுச் சான்றாக அமைவது எது?

5. இயல்புப் புணர்ச்சி, தோன்றல் புணர்ச்சிக்கு ஒவ்வோர் எடுத்துக் காட்டு எழுதுக.

   இயல்புப் புணர்ச்சி: 

   தோன்றல் புணர்ச்சி: 

6. ஈழத்தின் வடக்கே இந்தியா அமைந்துள்ளது. இச்சொல்லியத்தில் வந்துள்ள வேற்றுமை உருபையும் பொருளையும் எழுதுக.

   வேற்றுமை உருபு: 

   பொருள்: 

7. இன்கலைகள் குமுகத்திற்கும் வழிபாட்டிற்கும் துணை செய்கின்றன.

   இத்தொடர்ச் சொல்லியத்தை, தனிச் சொல்லியங்களாக மாற்றி எழுதுக.

5 X 2 = 10 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.

1. புன்சிரிப்பு: ______________________________

2. புத்தம்புதிய: ______________________________

3. மின்னஞ்சல்: ______________________________

4. உயர்கல்வி: ______________________________

5. முத்தமிழ்: ______________________________

5 X 2 = 10 புள்ளிகள்

## 4 பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

அன்பு நிறைந்த பாட்டி என்னை
அணைத்துத் தூக்கும் பாட்டி
இன்பமான கதைகள் எல்லாம்
எனக்குச் சொல்லும் பாட்டி
வாழைப் பழமும் இனிப்பும் எனக்கு
வாங்கித் தந்த பாட்டி
தோளிற் கிடத்தி முதுகைத் தடவித்
தூங்க வைக்கும் பாட்டி

- க. வேந்தனார்

1. பாட்டி என்னை எப்படித் தூக்குவார்?

______________________________

2. அவர் எப்படிப்பட்ட கதைகள் சொல்வார்?

______________________________

3. பாட்டி எப்படித் தூங்க வைப்பார்?

______________________________

4. அவர் வாங்கித் தந்த பழம் எது?

______________________________

5. பாட்டி எப்படிப்பட்டவர்?

______________________________

5 X 2 = 10 புள்ளிகள்

## 5 தரப்பட்டுள்ள சொல்லியங்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

**ஆங்கிலம்:**

1. The elder brother searches for books to read.
2. Guests came to our house yesterday.
3. We go to the beach in the summer.
4. People lose their homes due to war.
5. Monkeys pick fruits from the tree.

**யேர்மனி:**

1. Mein Bruder sucht nach Büchern und liest sie.
2. Gestern kamen Gäste zu uns nach Hause.
3. Wir gehen in der Sommerzeit an den Strand.
4. Die Menschen verlieren durch den Krieg ihre Heimat.
5. Die Affen pflücken Früchte vom Baum.

**நோர்வே:**

1. Storebroren finner bøker for å lese.
2. Det kom gjester til huset vårt i går.
3. Vi drar til stranden om sommeren.
4. Folk mister hjemmet sitt på grunn av krig.
5. Apekatter plukker frukt fra trærne.

**இத்தாலி:**

1. Il fratello ricerca i libri e li legge.
2. Ieri a casa nostra sono venuti degli ospiti.
3. Noi d'estate andiamo al mare.
4. Il popolo perde le zone residenziali per la guerra.
5. Le scimmie stanno raccogliendo le frutte dagli alberi

**நெதர்லாந்து:**

1. Broer zoekt en leest de boeken.
2. Gisteren waren er gasten bij ons thuis.
3. Wij gaan in de zomer naar het strand.
4. Mensen verliezen hun huis door de oorlog.
5. Apen plukken het fruit van de bomen.

**டென்மார்க்:**

1. Storbror finder bøger han kan læse.
2. Igår fik vi gæster på besøg hos os.
3. Om sommeren tager vi på stranden.
4. Folk mister deres hjem grundet krigen.
5. Aber plukker frugter fra træer.

**சுவீடன்:**

1. Storebror letar reda på böckerna och studerar.
2. Igår kom gäster till vårt hus.
3. Vi kommer att gå till stranden på sommaren.
4. Folk förlorar sina hem på grund av krig.
5. Aporna plockat frukten från träden.

**பின்லாந்து:**

1. Isoveli etsii kirjoja ja lukee.
2. Vieraita tuli meidän taloon eilen.
3. Me menemme rannalle kesällä.
4. Ihmiset menettävät elinympäristönsä sodan vuoksi.
5. Apinat poimivat hedelmiä puusta.

**தமிழ்**

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________

5 X 2 = 10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. திருக்குறள்
2. தமிழிலக்கிய வரலாற்றில் சங்கமருவியகாலம்
3. நூலகம்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - நூலகத்தின் செயற்பாடுகள்
   - நூல்களின் வகைகள்
   - பெற்ற பயன்கள்

4. வாழிடமொழிப் பள்ளி

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - படிக்கும் பள்ளி - வகுப்புநிலை
   - பள்ளியைப் பற்றி நீங்கள் அறிந்தவை
   - கல்வி கற்பதன் நோக்கமும் பயன்களும்

15 புள்ளிகள்

# பகுதி 2
# வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

## 1 பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.

மூங்கில் புல் இனத்தைச் சேர்ந்த ஒரு நிலைத்திணையாகும். இது மிகஉயரமாக வளரக் கூடியது. உலகில் 1500க்கும் மேற்பட்ட மூங்கில் இனங்கள் உள்ளன. இவற்றுள் சீன மூங்கில் என்ற ஓர் இனமும் உண்டு. ஏனைய மரங்களைப் போலவே மூங்கிலுக்கும் நீர், வளமான மண், கதிரவன் ஒளி போன்ற இயற்கை வளங்கள் தேவை. ஆனால், இவையெல்லாம் இருந்தும் சீன மூங்கிலின் விதை விதைத்து நாள்கள் மாதங்களாகி, மாதங்கள் ஆண்டுகளாகியும் முளை வருவதற்கான எந்த அறிகுறியும் தென்படாது. ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரே சீன மூங்கில் முளை விடும். ஆனாலும் அதற்குத் தேவையான நீரும் ஒளியும் தொடர்ந்து கிடைத்துக்கொண்டே இருக்க வேண்டும். சீன மூங்கிலின் முளை எழும்பியதும் மிகவேகமாக வளரும். அது முளை விடுவதற்கு முன், தனது வேர்களை அடி ஆழத்தில் மிக வலுவாகப் பதிக்கும். அந்த வலுவான ஆற்றல்தான் அதன் மிகவேகமான வளர்ச்சிக்குக் காரணமாகும். இதற்கு ஐந்து ஆண்டுகள் தேவைப்படுகின்றன.

1. சீன மூங்கில் முளைக்க எத்தனை ஆண்டுகள் எடுக்கும்?

   ______________________________

2. சீன மூங்கில், முளை எழும்பியதும் எப்படி வளரும்?

   ______________________________

3. சீன மூங்கிலுக்குத் தேவையான இயற்கை வளங்கள் எவை?

   ______________________________

   ______________________________

4. இந்த மூங்கிலின் மிகவேகமான வளர்ச்சிக்குக் காரணம் யாது?

   ______________________________

   ______________________________

5. மூங்கில் எந்த இனத்தைச் சேர்ந்தது?

   ______________________________

5 X 2 = 10 புள்ளிகள்

## 2 மாறியிருக்கும் சொல்லியங்களை ஒழுங்குபடுத்தி, பந்தி அமைப்புக்குப் பொருத்தமான எண்களைக் கட்டத்தினுள் எழுதுக.

1. அவன் அக்குருவிக்குஞ்சைப் பிடித்துச் சென்றான்.
2. குருவி ஒன்று மரத்தில் கூடு கட்டி, தனது மூன்று குஞ்சுகளுடன் வாழ்ந்து வந்தது.
3. குருவிக்குஞ்சு அன்னை சொல்லைக் கேட்டிருந்தால் இந்த நிலை எனக்கு வந்திருக்காது என எண்ணியது.
4. அது குஞ்சுகளுக்கு நாளும் இரைதேடிக் கொண்டுவந்து கொடுத்து, "இறக்கைகள் முளைத்ததும் பறக்கக் கற்றுக்கொள்ளுங்கள்" எனக் கூறியது.
5. சில நாள்களின் பின் இரண்டு குஞ்சுகள் தாயுடன் இரைதேடப் பறந்து செல்ல, ஒரு குஞ்சு மட்டும் கூட்டில் இருந்ததை வேடன் ஒருவன் பார்த்தான்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

5 X 1 = 5 புள்ளிகள்

**குறிப்பு:**

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |